**வரையறுத்த இலங்கை சீனி தனியார் கம்பனி – 2019**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

வரையறுத்த இலங்கை சீனி தனியார் கம்பனியின் (“கம்பனி”) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், மற்றும் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான சான்றுகளை பெற்றுக்கொள்ளவதற்கு எனக்கு முடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்பட்டுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

2018இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

2018இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு இணங்க பேணப்படுகின்ற கணக்காய்வு அபிபிபிராயத்தின் அடிப்படையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளரின் அறிக்கையினை வழங்குவது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதிளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டுக் நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 66 (இ) பந்தியின் பிரகாரம் அறிக்கையிடப்படுகின்ற காலப்பகுதியிலிருந்து 12 மாதங்களுக்குள் முதிர்ச்சியடைகின்ற சொத்துக்கள் மாத்திரம் நடைமுறைச் சொத்துக்களாக அறிக்கையிடப்படவேண்டிய போதிலும் பெல்வத்தை பிரிவின் 2024 ஏப்ரல் 22 ஆந் திகதி முதிர்ச்சியடைந்த ரூபா 43,544,918 தொகையான நிலையான சொத்துக்கள் மற்றும் செவனகல பிரிவின் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் இறுதியின் போது முதிர்ச்சியடைந்த ரூபா 100,000,000 தொகையான 03 நிலையான வைப்புக்கள் நிதி நிலைமை கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன. | 2014 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள இந்த நிலையான வைப்புக்கள் எதிர்காலத்தில் 5 ஆண்டுகளுக்காக முதலீடு செய்யப்பட்டு நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் அறிக்கையிடப்படுகின்ற காலப்பகுதியிலிருந்து 12 மாதங்களுக்குள் முதிர்ச்சியடைகின்ற சொத்துக்கள் மாத்திரம் நடைமுறைச் சொத்துக்களாக அறிக்கையிடப்படுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 117 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பயன்படுத்தப்படுகின்ற முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் பெல்வத்தை மற்றும் செவனகல பிரிவின் முறையே ரூபா 1,027,194,679 மற்றும் ரூபா 230,931,560 தொகையான விவசாயக் கடன்களுக்காக முறையே ரூபா 499,299,398 மற்றும் ரூபா 9,242,963 தொகைகளான ஐயக்கடன் ஒதுக்கீடுகளுக்குரிய கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஐயக்கடன்களுக்காக ஒதுக்கீடு செய்யும் கொள்கை அடுத்துவரும் கணக்கறிக்கையில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஐயக் கடன்களுக்காக ஒதுக்கீடு செய்யும் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பெல்வத்தை பிரிவின் கட்டிடங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள், வாகனங்கள், விவசாய உபகரணங்கள் என்பன மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது மதிப்பீடு செய்யப்பட்டு வழங்கிய அறிக்கை பூரணமற்றது என நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அப்போதிலிருந்து 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையும் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களை மீள்மதிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது பொறுப்பேற்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்த புத்தகப் பெறுமதிகள் அவ்வாறே கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன. அதற்கிணங்க ஏடுகளுக்கு கொண்டுவரப்பட்ட அனைத்து சொத்துக்களும் அந்த வகையிலேயே காணப்படுகின்றது எனவும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 4,334,737,840 கிரயமான மற்றும் தேறிய பெறுமதி ரூபா 1,547,310,647 தொகையான சொத்துக்கள் சரியானவை எனவும் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. | எதிர்காலத்தில் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உதவியுடன் நிலையான சொத்துக்களை மீள்மதிப்புச் செய்து கணக்குகளை செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் பிரகாரம் சொத்துக்களை மீள்மதிப்புச் செய்து சரியான பெறுமதியினை வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களின் வினைத்திறன் ஆயுட்காலத்தினை வருடாந்தம் மீளாய்வு செய்யாததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியளவில் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்து முடிவுறுத்தப்பட்ட பெல்வத்த பிரிவின் ரூபா 842,146,226 தொகையான மற்றும் செவனகல பிரிவின் ரூபா 99,511,282 தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அந்த மதிப்பீடு செய்த தவறினை இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் திருத்தம் செய்து சரியான இயலளவு பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2011 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தை அரசாங்கம் பொறுப்பேற்ற சந்தர்ப்பம் அளவில் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்து முடிவுறுத்திய சொத்துக்களும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காணப்பட்டதுடன் எதிர்காலத்தில் சொத்துக்களை மீள்மதிப்புச் செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்வதற்கும் நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் மீளாய்வு செய்து சரியான இயலளவு பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | கம்பனிக்கு எதிராக ஊழியர் மற்றும் வெளித்தரப்பினர்களால் தொடுக்கப்பட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வரும் வழக்குகளானது பெல்வத்த பிரிவிற்கு 13, செவனகல பிரிவிற்கு 12, தலைமை அலுவலகத்திற்கு 03 என்பனவாக 28 ஆக இருந்ததுடன் அந்த வழக்குகளின் நிகழ்கால நிலைமையினை கருத்தில் கொண்டு இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 84, 85 | 2019 கணக்காண்டு வரை இந்த வழக்குகள் தொடர்பான இழப்பீடுகள் பற்றி தீர்மானகிக்கப்பட்டிருக்காத தனால் நிதி அறிக்கையில் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புகளுக்காக ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதற்கோ அல்லது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கோ |

| | | |
|---|---|---|
| மற்றும் 86 ஆம் பந்திகளின் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புக்களுக்காக ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்வதற்கு அல்லது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2011 இன் 43 ஆம் இலக்க குறைந்த செயற்பாடுள்ள தொழில்முயற்சிகளை அல்லது குறைந்த பயன்பாடுள்ள சொத்துக்களை மறுசீரமைத்தல் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் செவனகல பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த 469.1674 ஹெக்டயர் காணிகளும் அக்காணிகளில் அமைந்துள்ள கட்டிடங்களும் பொறிகள் மற்றும் இயந்திரங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படாததனால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற கட்டிடங்கள், பொறிகள் மற்றும் இயந்திரங்கள் தொடர்பாக பெறுமானத்தேய்விற்காக ஒதுக்கீடு செய்தல் கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை. | செவனகல பிரிவிற்குரிய 469.1674 ஹெக்டயர் அளவான காணியில் தற்பொழுது அனுமதியற்றவர்கள் குடியிருப்பதனால் அந்த வீடுகளை சுவீகரிப்பதற்கு முடியாதுள்ளது. இந்த காணிகள் சம்பந்தமாக காணப்படுகின்ற வழக்கு செயற்பாடுகள் முடிவடைந்து வருவதுடன் அதன் பின்னர் அதில் அமைந்துள்ள கட்டிடங்களையும் இயந்திரங்களையும் ஏடுகளில் உள்ளடக்கி பெறுமானத் தேய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கம்பனியின் காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கும் அவற்றினை ஏடுகளில் பதிந்து கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | செவனகல பிரிவினால் 2018 ஆம் ஆண்டிற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பொருளாதார சேவைக் கட்டண வரி ரூபா 11,110,023 தொகையானது அப்பிரிவினால் 2019 மே 24 ஆந் திகதி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் அது பிழையாக தொடர்புபட்ட தரப்பினர்களுக்கான கொடுப்பனவாக அப்பிரிவின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. மேலும் தலைமை அலுவலகத்தினால் அந்த வரிப் பணத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்காது செவனகல பிரிவிலிருந்து கிடைக்க வேண்டிய பணத்திற்காக எதிரீடு செய்யப்பட்டிருந்ததனால் செலுத்த வேண்டிய வரிப் பொறுப்பு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செவனகல பிரிவினால் 2018 ஆம் ஆண்டிற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணவரி ரூபா 11,110,023 தொகை அப்பிரிவினால் கட்டுப்பாட்டுக் கணக்கினூடாக தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரிப்பணம் நிர்ணயிக்கப்பட்டவாறு கணக்குகளில் செம்மையாக்குவதற்கும் செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சீனி மற்றும் சீனி சார்ந்த உற்பத்திப் பொருட்களின் அடிப்படையில் என பெறுமதி சேர் வரி அறவீட்டிலிருந்து கம்பனி விடுவிக்கப்பட்டிருந்தும் செவனகல பிரிவினால் முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் ரூபா 13,922,835 தொகையான பெறுமதி சேர் வரியினை அறவீடு செய்து அதில் செலவுகளின் அடிப்படையில் செலுத்தப்பட்ட ரூபா 10,156,443 பெறுமதி சேர் வரி கணக்குகளில் எதிரீடு செய்யப்பட்டிருந்தது. இதனால் கம்பனியின் செலவுகள் ரூபா 10,156,443 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் 2008 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து சீனி மற்றும் சீனி சார்ந்த உற்பத்திப் பொருட்களின் மீதான பெறுமதி சேர் வரி அறவீட்டிலிருந்து கம்பனி விடுவிக்கப்பட்டிருந்தது. | உள்நாட்டு இறைவரி ஆணையாளரிடமிருந்து ஆலோசனையைப் பெற்று அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | விவசாயிகள் கடன்பட்டோலையில் அறவிட வேண்டிய கடன் மீதிகளிலிருந்து ரூபா 1,488,265 செலவு மீதி எதிரீடு செய்யப்பட்டு காட்டப்பட்டிருந்தது. | விவசாயக் கடன் மீதியினை பின்தொடர் நடவடிக்கை எடுக்கும் போது இனங்காணப்பட்ட தவறுகளின் அடிப்படையில் மீளச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 1,488,265 ஆகும். | அறவிட வேண்டிய கடன் மீதியானது நடைமுறைச் சொத்துக்களின் கீழும் செலுத்த வேண்டிய கடன் மீதியானது நடைமுறைப் பொறுப்புக்களின் கீழும் காட்டப்படுதல் வேண்டும். |
| (உ) | செவனகல பிரிவின் 07 பேரேட்டுக் கணக்குகளில் முன்னைய ஆண்டில் ரூபா 1,890,879,751 தொகையான மீதிகளின் மொத்தம் மீளாய்வாண்டின் போது ரூபா 1,890,381,939 தொகையாக ரூபா 497,862 குறைத்தும் 04 பேரேட்டுக் கணக்குகளின் முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,932,921,284 தொகையான மீதிகளின் மொத்தம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 2,293,463,140 ஆக ரூபா 360,541,856 அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது. மேலும் முன்னைய ஆண்டின் இறுதியில் மீதி இல்லாத 08 செலவுக் கணக்குகளின் மொத்தம் ரூபா 475,703 தொகையான ஆரம்ப வரவு மீதிகளும் ஒரு செலவுக் கணக்கின் ரூபா 2,428,800 ஆரம்ப செலவு மீதியும் பதியப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகள் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது 2018 ஆம் ஆண்டிற்கான கொடுக்கல் வாங்கல்கள் 2019 ஆம் ஆண்டின் கணக்கீட்டு முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளதனால் இத்தவறு ஏற்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | கணக்கு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற மென்பொருட்களில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகள் தீர்த்து வைக்கப்படாதிருந்ததனால் இந்த மீதி சுட்டிக்காட்டப்பட்டது. | ஆண்டின் இறுதியில் கணக்குகளைத் தீர்த்து சரியான மீதி முன்கொண்டு வரப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | செவனகல பிரிவின் நடைமுறை வேலைப் பெறுமதியான ரூபா 29,932,255 பிழையாக வகைப்படுத்தப்பட்டு ஆதனம், பொறி மற்றும் உபகரண பெறுமதிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டு ஒரு விடயமாக நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்டிருந்தமையினால் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதி அத்தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | அடுத்துவரும் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறை வேலையானது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் தனியாக காட்டுதல் வேண்டும். |
| (எ) | செவனகல பிரிவின் ரூபா 285,000,000 தொகையான 07 நிலையான வைப்புக்கள் வங்கி கடனையும் வங்கி மேலதிகப் பற்று வசதிகளையும் பொற்றுக்கொள்வதற்காக பிணையாக வைக்கப்பட்டிருந்தமை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனியின் நிலையான வைப்புக்களை பிணைவைத்தல் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஏ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செவனகல பிரிவின் நிதிக்கூற்றுக்களில் நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 788,059,004 ஆக இருந்த போதிலும் நிலையான வைப்புக்கள் பட்டோலையில் உள்ளடக்கப்பட்ட 19 வைப்புக்களின் பெறுமதி ரூபா 711,059,003 ஆகும். ரூபா 45,000,000 பெறுமதியான 02 நிலையான வைப்புக்கள் பட்டோலையில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 23,000,000 தொகையான 02 வைப்புக்களுக்காக கம்பனியிடம் வைப்புக்களைப் புதுப்பிக்கும் அறிவுறுத்தல் இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 788,059,004 ஆகும். | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட வைப்புக்களின் பெறுமதியானது பதிவேடுகளினாலும் பட்டோலைகளினாலும் புதுப்பிக்கும் அறிவித்தலினாலும் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஐ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செவனகல பிரிவின் இருப்புக்கள் பௌதீக மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ரூபா 501,069,784 இற்குப் பதிலாக பேரேட்டின் படியான பெறுமதியாகிய ரூபா 825,392,789 தொகை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 385,097 பெறுமதியான 174 இருப்பு விடயங்களின் பற்றாக்குறையும் ரூபா 565,010 பெறுமதியான 180 இருப்பு விடயங்களின் மிகையும் காணப்பட்டது எனவும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத மற்றும் கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டிய ரூபா 6,388,008 பெறுமதியான 825 இருப்பு விடயங்களும் பின்காட்டிகளில் உள்ளடக்கப்படாத அதிக அளவிலான பொருட்களும் களஞ்சியத்தில் காணப்படுகின்றன என்பதுவும் பௌதீக | பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் சம்பந்தமாக அடுத்துவரும் ஆண்டின் போது பின்தொடர் நடவடிக்கை எடுத்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இருப்புக்கள் சம்பந்தமாக முறையான உள்ளகக் கட்டுப்பாடுகளைப் பேணி பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவேண்டியதுடன் பௌதீக மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட மீதிகளை நிதிக்கூற்றுக்களிலும் வெளிப்படுத்துவதற் |

| | | | |
|---|---|---|---|
| | மெய்மையாய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றமையும் பெறுவனவுகள் கணக்கீடு செய்யப்படாது இருப்புக்களிலிருந்து வழங்குதல் செய்யப்பட்டதனாலும் 04 இருப்பு பேரேட்டுக் கணக்குகளில் மொத்தமாக ரூபா 235,709,044 செலவு மீதி காணப்படுகின்றமை காரணமாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 825,392,789 இருப்பு பெறுமதிகளின் சரியானதன்மை தொடர்பாக திருப்தி கொள்ளமுடியாதிருந்தது. | | கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | பெல்வத்தை பிரிவின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பெறுமானத் தேய்வுக் கொள்கையின் பிரகாரம் ரூபா 3,178,861,066 கிரயமான வெளிக்கள இயந்திரங்களும் உபகரணங்களும் (குத்தகை சொத்துக்களுடன் சேர்த்து) நீர்ப்பாசன மற்றும் நானாவித உபகரணங்கள் மற்றும் தொழிற்சாலை மின்நிலையங்களும் உபகரணங்களும் என்பவற்றின் பெறுமானத் தேய்வு விகிதம் முறையே 15 சதவீதம், 6 சதவீதம் மற்றும் 5 சதவீதமாக இருந்ததுடன் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான பெறுமானத் தேய்வு விகிதம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் அச்சொத்துக்களில் ரூபா 1,618,821,687 கிரயமான ஒரு பகுதி சொத்துக்கள் 2 சதவீதத்திற்கும் 25 சதவீதத்திற்கும் இடைப்பட்ட பல்வேறு விகிதங்களின் கீழ் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டிற்கான பெறுமானத் தேய்வுச் செலவுகளினதும் பெறுமானத் தேய்விற்கான ஒதுக்கீடுகளினதும் சரியான தன்மையை திருப்பதிகரமாக பரீட்சித்துக்கொள்ள முடியாதிருந்தது. | 2011 ஆம் ஆண்டில் நிறுவனத்தை அரசாங்கம் பொறுப்பேற்கும் போது காணப்பட்ட சொத்துக்கள் அந்த வகையிலேயே நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தன. காணப்பட்ட பெறுமானத் தேய்வுக் கொள்கையின் பிரகாரம் பெறுமானத் தேய்வு விகிதங்களில் வித்தியாசம் காணப்பட்டது. கணக்கீட்டு முறைமையில் உரிய விகிதத்தில் மாற்றங்கள் செய்யமுடியாது என்பதனால் எதிர்காலத்தில் சொத்துக்களை மீள்மதிப்புச் செய்வதுடன் நிறுவனத்தின் பெறுமானத் தேய்வுக் கொள்கையையும் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உட்கட்டமைப்பு வசதிகளுக்காக உறுதியான பெறுமானத் தேய்வு விகிதத்தினை தீர்மானிக்க வேண்டியதுடன் பெறுமானத் தேய்வுக் கொள்கைக்கு இணங்க பெறுமானத் தேய்வினைக் கணித்தல் வேண்டும். |
| (ஓ) | பெல்வத்தை பிரிவில் களஞ்சியத்திலிருந்து வழங்கப்பட்ட பொருட்களின் கொள்விலைக்குப் பதிலாக அப்பொருட்கள் வகுப்பின் இறுதியாக கொள்வனவு செய்த விலைக்கு கணக்குகளில் பதிவு செய்து அந்த வித்தியாசத்தினை மதிப்பீட்டு செம்மையாக்கல் கணக்கினூடாக நிதிக்கூற்றுக்களில் செலவுக்கு செம்மையாக்கப்படுவதுடன் மீளாய்வாண்டில் அந்த வகையில் 04 செலவுத் தலைப்புக்களுக்கு ரூபா 2,065,100 தொகை சேர்த்துக்கொள்ளப்பட்டு 06 செலவுத் தலைப்புக்களிலிருந்து ரூபா 2,287,509 கழித்து காட்டப்பட்டிருந்தது. மேலும் விலை மாற்றங்களின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானமாக | 1999/2000 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படுகின்ற முறைமைக்குள் சுயமாகவே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் ஸ்தாபிப்பதற்கு எதிபார்க்கப்படுகின்ற கணக்கீட்டு முறைமையினூடாக இதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒவ்வொரு செலவு விடயத்தின் உள்ளபடியான செலவினை சரியாக நிதிக்கூற்றுக்களில் காட்டுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விற்பனைக் கிரயம், தாபன மற்றும் நிருவாகச் செலவுகள் மற்றும் பயிற்சி செலவுகளிலிருந்து ரூபா 230,254,054 கழித்துக் காட்டப்பட்டிருந்தது. கணக்கீட்டு மென்பொருட்களில் காணப்பட்ட தவறுகளின் காரணமாக இடம்பெற்ற இக்கணக்கீட்டு செம்மையாக்கலினால் நிதிக்கூற்றுக்களில் ஒவ்வொரு செலவு விடயங்களின் சரியான செலவுகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஔ) | 2014 யூன் 30 ஆந் திகதி ரூபா 42,529,510 இற்கு கொள்வனவு செய்து 2018 யூலை 07 ஆந் திகதி தீயினால் அழிவடைந்த பெலவத்த பிரிவின் சீனியை கட்டியாக மாற்றும் Modification Automation Factory Plant எனும் யெருள்ள இயந்திரத்திற்காக காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து வேண்டிக் கொள்ளப்பட்ட ரூபா 40,430,655 தொகையான இழப்பீட்டுப் பணத்தில் 2019 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 12,653,693 தொகையில் இயந்திரத்தினை திருத்தம் செய்யாது நிதி நிலைமைக் கூற்றில் மீதியாகக் காட்டப்பட்டிருந்ததுடன் இந்த தீ சேதங்கள் சம்பந்தமாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பயன்படுத்தப்படாத இந்த இயந்திரங்களின் கிரயத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதிவரை வருடாந்தம் 5 சதவீதப்படியாக ரூபா 2,126,475 தொகை பெறுமானத் தேய்விற்காக ஒதுக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கடினப் பொருட்கள் மற்றும் மென்பொருட்களுக்காக ரூபா 40,430,655 இழப்பீட்டுப் பணம் வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தும் மென்பொருட்களுக்கான இழப்பீட்டுப் பணம் நிராகரிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் போது இயந்திரங்களை திருத்தம் செய்யும் நடவடிக்கை முடிவடைந்துள்ளது. புதிய சொத்துக்களை ஸ்தாபித்தல் சம்பந்தமான செம்மையாக்கல் மற்றும் வெளிப்படுத்துதல் 2021 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படும். மென்பொருட்களில் காணப்பட்ட தவறுகளின் காரணமாக இயந்திரத்தினை பெறுமானத் தேய்வு செய்தலினை நிறுத்துவதற்கு முடியாதுள்ளது. 2021 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்பட்டுள்ளது. | இயந்திரத்திற்குப் பெறுமானத் தேய்வு செய்தலினை கைவிட்டு அதனை கைதவிர்ப்புச் செய்வதற்கு அல்லது திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (க) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகள் தொடர்பாக பெல்வத்த பிரிவினால் செலுத்த வேண்டிய பொருளாதார சேவைக் கட்டண வரி ரூபா 31,828,247 தொகைக்காக கணக்குகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான பொருளாதார சேவைக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஒதுக்கீடு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான பொருளாதார சேவைக் கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும். |
| (கா) | செவனகல பிரிவில் 2019 ஆம் ஆண்டில் பணமாக பெற்றுக்கொள்ளப்பட்ட நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 65,771,479 ஆக இருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் பெறவேண்டிய வட்டியையும் உள்ளடக்கி அப்பெறுமதி ரூபா 113,015,414 ஆக ரூபா 47,243,935 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசு உட்பாய்ச்சல்களும் காசு வெளிப்பாய்ச்சல்களும் மாத்திரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | துணை அறிக்கைகளின் பிரகாரம் மீதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | செவனகல பிரிவின் நிதிக்கூற்றுக்களில் 2019 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி | 2,229,383 | 3,455,540 | 1,226,157 | இந்த வித்தியாசம் சம்பந்தமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் பரீட்சிக்கப்பட்டு வருகின்றது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரியினை துணை அறிக்கைகளுடன் ஒப்பீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | செவனகல பிரிவில் விவசாயிகளிடமிருந்து பெற வேண்டிய கடன் | 230,931,560 | 228,713,938 (பட்டோலை)<br>230,202,208 (காலப்பகுப்பாய்வு அறிக்கை) | 2,217,622<br>729,352 | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற விவசாயக் கடன் மீதியினை காலப் பகுப்பாய்வுடன் ஒப்பீடு செய்தல் வேண்டும். |
| (இ) | 2015/2016 மற்றும் 2016/2017 ஆண்டுகளுக்காக கம்பனி செலுத்த வேண்டிய வருமான வரிப் பொறுப்பு | 225,689,280 | 40,435,876 (உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கணனி வரி தரவு முறைமையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம்) | 185,253,404 | வித்தியாசம் தொடர்பாக மேலும் பரீட்சிப்புக்களை செய்ய வேண்டியிருந்தது. | கம்பனியால் செலுத்த வேண்டிய வருமான வரியினை சரியாக கணித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை | வழங்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரசாங்க | 674,101,828 | கொடுக்கல் வாங்கலை உறுதிப்படுத்துவது தொடர்பான | இந்த அரசாங்க நிறுவனங்கள் நேரடியாக மற்றும் மறைமுகமாக கம்பனியுடன் | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட தொடர்புபட்ட அரசாங்க மற்றும் தனியார் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கம்பனிகளிடமிருந்து அறவிட வேண்டியிருந்த மீதிகளுக்கு மற்றும் 2012-2019 காலத்திற்குள் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களுக்காக செவனகல மற்றும் பெல்வத்த பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவுகளிலிருந்தும் கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய பணம் சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்கள் | | விபரம் | தொடர்புபட்டுக் காணப்படுவதனால் தொடர்புபட்ட தரப்பினர்களாகவும் கம்பனியின் ஒவ்வொரு பிரிவுகளுக்குமிடையிலான கொடுக்கல் வாங்கல் கட்டுப்பாட்டுக் கணக்கினூடாக இடம்பெறுகின்றது. | கம்பனிகளிடமிருந்தும் வரையறுத்த இலங்கை சீனிக் கம்பனியிடமிருந்தும் ஒவ்வொரு பரிவுகளுக்குமிடையே இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பெறவேண்டிய மீதிகளை விபரமாக வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 2015, 2016 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் செவனகல பிரிவு தயாரித்த காபன்யொக்சயிட் வாயுவினைக் கொள்வனவு செய்த ஒரு தனியார் கம்பனியிடமிருந்து கிடைக்கவேண்டிய பணம் | 17,770,596 | மீதிகளை உறுதிப்படுத்தல்கள் | அடுத்து வரும் ஆண்டின் போது மீதிகளை உறுதிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளை உறுதிப்படுத்துதல். |
| (இ) | கம்பனியின் தலைமை அலுவலகத்தின் நிருவாகச் செலவுகள் | 51,804,587 | செலவுகளின் விபரம் | செலவுகளின் விபரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவில்லை. | பெறுமதிகள் தயார்படுத்தப்பட்ட முறைமைகள் |
| (ஈ) | பெல்வத்த பிரிவில் நாட்குறிப்கு வவுச்சர்களின் மூலம் 13 பேரேட்டுக் கணக்குகளின் 1945 வரவுக் குறிப்புக்களினூடாக பதிவுசெய்யப்பட்ட ரூபா 31,000,651 கூட்டு மொத்த தொகையான மற்றும் 47,981 செலவுக் குறிப்புக்களின் மூலம் பதிவு செய்யப்பட்ட ரூபா 677,211,106 மொத்த தொகையான கொடுக்கல் வாங்கல்கள் | 677,211,106 | நாட்குறிப்பு வவுச்சர்களின் விபரக் குறிப்புக்கள் | காணப்படுகின்ற கணக்கீட்டு மென்பொருட்களில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவுசெய்யும் போது இக்குறைபாடுகள் உருவாகியுள்ளது. 2022 ஆம் ஆண்டில் புதிய மென்பொருளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நாட்குறிப்புக்களுக்கான அடிக் குறிப்புக்கள் |
| (உ) | கம்பனியின் முன்னைய உரிமையாளருக்குச் சொந்தமான 20 உழவு இயந்திரங்கள் பெல்வத்தை பிரிவினால் | 26,971,297 | எழுத்துமூல உடன்படிக்கையும் மீதிகளின் உறுதிப்படுத்தல்களும் | கம்பனி தொடக்கத்திலிருந்தே எழுத்து மூல உடன்படிக்கையின்றி மேற்கொண்டுள்ள | எழுத்துமூல உடன்படிக்கை மற்றும் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள். |

| | | | |
|---|---|---|---|
| | 2011 நவம்பர் மாதத்திலிருந்து 2019 திசெம்பர் 31 வரை வரையான 98 மாத காலத்தில் பயன்படுத்தியமைக்காக செலுத்த வேண்டிய ரூபா 45,106,891 தொகை மற்றும் அந்த உரிமையாளர் பெல்வத்த பிரிவின் வீடுகளை பயன்படுத்தியமைக்காக கிடைக்க வேண்டிய வாடகைக்கான ரூபா 18,135,593 தொகை எதிரீடு செய்யப்பட்ட பின்னர்வருமான வேறுபாடு | பணத்தை தீர்த்துவைத்தல்கள் செய்யாது இக்கொடுக்கல் வாங்கல்களுக்குரிய உழவு இயந்திரங்களை ஒப்படப்பதற்கு அல்லது உடன்படிக்கையின் அடிப்படையில் எடுத்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக சட்ட பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டள் ளது. இந்த அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் உடன்படிக்கை செய்யப்பட்டு காசு அடிப்படையில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பெல்வத்த மற்றும் செவனகல பிரிவில் கரும்பு செய்கையாளரிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய முறையே ரூபா 1,027,194,679 மற்றும் ரூபா 230,202,208 தொகையான கடன் மீதிகளுக்குள் 02 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக அறவிடாது காணப்படும் முறையே ரூபா 500,580,561 மற்றும் ரூபா 56,356,770 தொகையான கடன் மீதிகளாகும். கடன் தவணைப் பணங்களை அறவீடு செய்வதற்கு முறையான நடவடிக்கை | பெல்வத்த பிரிவில் நிறுவனம் ஆரம்பத்திலிருந்து அறவிடப்படாத ரூபா 499,299,398 தொகையான கடனுக்காக ஐயக்கடனுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் மிகுதி ரூபா 527,895,281 கடன்களில் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட ரூபா 464,023,067 கடனானது விவசாயிகளின் விளைச்சல் குறைவடைந்ததனால் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தமையின் காரணமாக அவர்களை பயிர்ச்செய்கையில் ஈடுபடச் செய்வதனை குறிக்கோளாகக் கொண்டு பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் அறவீடு | தாமதமின்றி விவசாயக் கடனை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்காமை அனுமதியற்ற பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை மீண்டும் கரும்பு பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்காமை இதற்கான காரணமாக உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | கைவிடப்பட்டுள்ளது. பல்வேறு முயற்சிகளின் மூலம் விவசாயக் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. செவனகல பிரிவின் விவசாயக் கடன் சம்பந்தமாக கருத்துரைகள் தரப்படவில்லை. | |
| (ஆ) | பெல்வத்த பிரிவினால் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் 124 வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 11 ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டுகள் வரையான காலம் எடுத்திருந்த ரூபா 5,990,286 தொகையான முற்பணங்களும், 07 பேரேட்டுக் கணக்குகளில் 2012 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் ரூபா 284,102 மொத்த தொகையும் 2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஊழியர் சமூக மண்டபத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,021,657 தொகையும் ஆக மொத்தமாக ரூபா 7,296,045 தொகை 2021 செப்தெம்ர் 30 கணக்காய்வுத் திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்குனருக்குச் செலுத்தப்பட்டுள்ள முற்பணங்கள் தீர்த்துவைக்கப்பட்டுள்ளன. நீண்ட காலமாகக் காணப்பட்ட ரூபா 284,102 கடன் மீதிகளில் ரூபா 176,155 தொகை அறவிடப்படாதவை என உறுதிப்படுத்தி கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரூபா 1,021,657 பெறுமதியான சமூக மண்டபத்திற்கு வழங்கப்பட்ட கடன் சம்பந்தமாக கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | நிலுவையாக உள்ள கடன்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கரும்பு விவசாயிகளுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 62,850,641 தொகை நானாவித கடன்கொடுத்தோர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,226,088 தொகை, 17 வணிக கடன்கொடுத்தோர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 3,462,912 தொகை என்பனவாக ரூபா 67,539,641 மொத்த தொகையானது 02 ஆண்டுகளிலிருந்து 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்துவைக்கப்படாது காணப்பட்டமைக்கான காரணம் சமர்ப்பிக்கப்படவில்லை. | செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோர் மீதிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பெல்வத்த பிரிவின் நிதிக்கூற்றுக்களில் 24 கடன்கொடுத்தோர் கணக்குகளின் கீழ் பல கொடுக்கல் வாங்கல்களுக்கு 2002 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டுவரையான காலம் தொடர்பாக ரூபா 121,664,307 தொகை | நிறுவனத்தை அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு முன்பிலிருந்து காணப்பட்ட இந்த பல கடன்கொடுத்தோர் | தீர்த்துவைப்பதற்கு அல்லது பொருத்தமான வகையில் கணக்குகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| செலுத்த வேண்டியது என குறிப்பிடப்பட்டிருந்தும் அந்த மீதியை தீர்த்துவைக்காமைக்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளை செலுத்த வேண்டி ஏற்படும் எனக் கருதி நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்று கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இனக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரி அதிகாரச் சட்டத்தின் 4(i) ஆம் பிரிவு | 2019 திசெம்பர் 01 ஆந் திகதிக்கு முன்னர் தொடர்பாக இச்சட்டத்தின் கீழ் 2012- 2016 காலப்பகுதியில் பெல்வத்த பிரிவில் உற்பத்தி செய்த சீனியின் அடிப்படையில் செலுத்த வேண்டிய ரூபா 92,125,804 தொகையான தேசத்தை கட்டியெழுப்புதல் வரியினை (NBT) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2011 ஆம் ஆண்டில் நிறுவனத்தை அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின்னர் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சீனிக்காக தேசத்தை கட்டியெழுப்புதல் வரி செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் ஒதுக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது தொடர்பான வரி அறிக்கை அனுப்பிவைக்கப்படாததுடன் 2021 இன் 18 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பகுதியின் கீழ் பதிவழிக்கப்பட்டது என உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | நிலுவையாக உள்ள வரிப் பணத்தை தாமதமின்றி தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவு | ஒவ்வொரு மாதமும் இறுதித் திகதியில் கணிக்கப்பட்ட பெறுமதி சேர் வரியினை அடுத்துவரும் மாதத்தின் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் 2012 - 2019 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலப்பகுதியில் தெனோல் மற்றும் மொலேஸ்சஸ் விற்பனை செய்வதன் அடிப்படையில் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 27,347,134 தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தில் காணப்பட்ட நிதிச் சிக்கலினால் செலுத்த முடியாதிருந்தது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையாக உள்ள வரிப்பணத்தினை தாமதமின்றி உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். |
| (இ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் 23(அ) பிரிவினால் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அமைச்சினால் 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட கட்டளையின் 1 ஆம் பகுதியின் 30 ஆவது கட்டளை | சீனியை உற்பத்தி செய்தல் அல்லது சீனியை வடிகட்டுதல் சம்பந்தமாக பெல்வத்த மற்றும் செவனகல தொழிற்சாலைகளுக்காக சுற்றாடல் அதிகாரப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டின் இறுதிவரை சீனி தொழிற்சாலைகள் மற்றும் வடிசாலைகளுக்காக சுற்றாடல் அதிகாரப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சீனித் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் பெகேஸ் சுற்றாடலுக்குச் சேர்க்கப்படாது அவை சேகரிக்கப்பட்டு அகற்றும் தொழில்நுட்ப நடைமுறை ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் வடிசாலைக்கு அருகாமையில் சேதனப் பசளை உற்பத்தி செயற்திட்டம் 2022 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளலாம். | சுற்றாடல் பாதுகாப்பு நடைமுறை ஸ்தாபிக்கப்பட்டு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 5.2.5 ஆம் பந்தி | நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் ஒரு பிரதி உரிய ஆண்டு ஆரம்பித்து 15 நாட்கள் கடப்பதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2019 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் ஒரு பிரதி சமர்ப்பிக்கப்படவில்லை. | நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் ஒரு பிரதி நிர்ணயிக்கப்பட்ட திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பாதீட்டினைத் தயாரித்து சுற்றிக்கையின் பிரகாரம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 9.3 ஆம் பந்தி | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்ளும் நடைமுறை அங்கீகரிக்கப்படவில்லை. அதற்கிணங்க காணப்படுகின்ற பதவிகளின் எண்ணிக்கை சேர்த்தக்கொள்ளப்பட்ட மற்றும் பதவியுயர்வு வழங்கிய நடைமுறைகளினதும் சம்பள அளவுத்திட்டத்தினதும் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு அல்லது அது தொடர்பான அதானிப்புக்களை சமர்ப்பிப்பதற்கு முடியாதுள்ளது. | அங்கீகரித்த பதவியணியும் ஆட்சேர்ப்பு நடைமுறையும் தயாரிக்கப்பட்டு வருகின்றது. | சுற்றிக்கையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறையினைத் தயாரித்து அங்கீகரித்து கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 8.3.3(அ) ஆம் பந்தி | நிதிக்கூற்றுக்களும் வரைபு ஆண்டறிக்கையும் 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்து 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கையானது பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள மற்றும் இலாபம் ஈட்டியுள்ள நிறுவனத்திற்கு மிகையூதியத்தினைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த போதிலும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்கள் 17 மாதங்கள் வீதம் தாமதித்திருந்தும் மற்றும் தலைமை அலுவலகத்தின் ஒரு ஊழியருக்கு ஒரு மாத சம்பளமாக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 13,514,219 மற்றும் ரூபா 14,448,180 தொகைகள் மிகையூதிய படியாக செலுத்தப்பட்டிருந்தது. | இந்த நிறுவனம் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள ஒரு பெரிய நிறுவனம் என்பதனால் ஊழியர்களின் மற்றும் விவசாயிகளின் செயற்திறனான பங்களிப்பு இல்லாது செயற்படுத்த முடியாது. அதனால் கடந்த காலத்திலிருந்து பேணப்பட்டுவரும் ஒரு நடைமுறையாக ஊழியர்களுக்கு மற்றும் விவசாயிகளுக்கு மிகையூதிய படிகளும் ஊக்குவிப்பு படிகளும் செலுத்தப்படுகின்றன. அதன்மூலம் நிறுவனத்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | சுற்றிக்கைக்கு முரணான மிகையூதியத்தினை மீள அறவீடு செய்தல் வேண்டும். |
| (iv) | 8.3.3(இ)(ii) ஆம் பந்தி | மிகையூதியத்தைச் செலுத்துகையில் ஊக்குவிப்பு படியினைச் செலுத்த முடியாத போதிலும் செவனகல பிரிவின் மற்றும் தலைமை அலுவலகத்தின் ஊழியர்களுக்கு ரூபா 75,000 வீதம் மற்றும் பெல்வத்தை பிரிவின் ஊழியர்களுக்கு ரூபா 25,000 வீதம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 145,356,250 மற்றும் ரூபா 149,904,111 ஊக்குவிப்பு படிகள் திறைசேரியின் அனுமதியின்றி செலுத்தப்பட்டிருந்தது. | -மேற்படி- | சுற்றிக்கைக்கு முரணான ஊக்குவிப்பு படியினை மீள அறவீடு செய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

(அ) மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,362,373,144 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 163,387,023 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 1,198,986,121 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது கம்பனியின் மொத்த வருமானம் ரூபா 1,260,608,543 ஆல் அல்லது 19 சதவீத்ததால் குறைவடைந்திருந்தும் மொத்த செலவுகள் ரூபா 2,459,594,664 ஆல் அல்லது 36 சதவீத்ததால் அதிகரித்தல் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான விற்பனை வருமானம் ரூபா 6,242,954,355 மற்றும் விற்பனைக் கிரயம் ரூபா 5,025,819,435 ஆக இருந்ததனால் மொத்த இலாப விகிதம் 19.5 சதவீதமாக இருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான விற்பனை வருமானம் ரூபா 7,545,539,093 மற்றும் விற்பனைக் கிரயம் ரூபா 7,522,967,783 ஆக இருந்ததனால் மொத்த இலாப விகிதம் 0.3 சதவீத அளவிற்கு குறைந்த பெறுமதியினைக் கொண்டிருந்தது. முன்னைய ஆண்டின் இறுதியில் ரூபா 1,772,165,915 தொகையான மிகுதியான சீனி இருப்பு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 27,267,100 வரை ரூபா 1,744,898,815 ஆல் குறைவடைந்தமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் விற்பனைக் கிரயம் 49 சதவீத்தால் அதிகரித்திருந்தமை இது தொடர்பாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | செவனகல பிரிவினால் 2018 ஆம் ஆண்டின் போது இந்தியாவிலிருந்து ரூபா 9,564,866 பெறுமதிக்கு ரூபா 3,924,394 சுங்க கட்டணம் செலுத்தி இறக்குமதி செய்த ஆவியாகுதல் இயந்திரத்திற்கான (Evaporator) துணைக் கருவியானது (SS Tube) பொருள் விபரக் குறிப்பிற்கு இணங்கியிருக்காததன் அடிப்படையில் மீள அனுப்பி 2019 ஆம் ஆண்டின் போது மீண்டும் இறக்குமதி செய்த போது செலுத்திய ரூபா 4,830,446 தொகையான சுங்க கட்டணத்தை வழங்குனரிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் அது கம்பனிக்கு நட்டமாக இருந்தது. மேலும் அந்த சுங்க கட்டணத்தை செலுத்தியமை தொடர்பான ஆவணங்கள் கம்பனியிடம் இல்லாததன் காரணமாக அப்பெறுமதியானது வெளிநாட்டுக் கட்டளை முற்பணமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பெறுகை முகாமையாளரால் செலுத்தப்பட்ட சுங்க கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுங்க கட்டணத்தை வழங்குனரிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செவனகல பிரிவின் தொழிற்சாலையினது தேவைப்பாட்டிற்காக ரூபா 11,412,646 பணத்திற்கு 2018 ஆம் ஆண்டின் போது இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இலத்திரனியல் காந்தம் வேறாக்குதல். (Electro Magnetic Separator) இயந்திரம் பொருத்தமான நிலையில் காணப்படுகின்றது என கம்பனியின் பொறியியலாளரால் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்காததன் காரணமாக 2021 ஆகஸ்ட் மாதமளவில் 03 ஆண்டுகளை அண்மித்த காலமாக பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது பயன்படுத்தப்படாது இருந்ததனால் மேற்கொள்ளப்பட்ட செலவு விளைவற்றதாக இருந்ததுடன் செலுத்திய பணம் மூலதனமாக்கப்படாது வெளிநாட்டு கொள்வனவு முற்பணத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | உரிய உபகரணத்தை இறக்குமதி செய்த இந்திய கம்பனியின் உத்தியோகத்தரின் உதவியினைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியம் ஏற்பட்டுள்ளதனால் காணப்படுகின்ற தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் அச்செயற்பாடு தாமதமடைந்துள்ளது. தற்பொழுது மீண்டும் அச்செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விசாரணைகளை மேற்கொண்டு பெறுகையிலுள்ள தவறாக இருந்தால் பொறுப்புக் கூறக்கூடிய நபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | செவனகல பிரிவிற்குரிய காணியிலுள்ள 03 கட்டிடங்கள் இரண்டு வியாபாரிகளுக்கு உடன்படிக்கை செய்துகொள்ளாது அல்லது கட்டணம் அறவிடாது தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 2012 ஆம் ஆண்டிலிருந்து வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு ரூபா 1,279,792 தொகையான நீர் வசதிகளும் வழங்கப்பட்டிருந்தன. | செவனகல நிறுவனத்திற்கு எதிராக காணப்படுகின்ற வழக்கு நடவடிக்கைகளின் காரணமாக தனிப்பட்ட முதலீட்டாளரின் இடத்திற்கு பலவந்தங்களை மேற்கொள்ளமுடியாதுள்ளது. | வெளித்தரப்பினர்களால் பயன்படுத்தப்படுகின்ற கம்பனியின் ஆதனங்களின் நீர் வழங்கலினை தடைசெய்வதற்கும் அதனை கைப்பற்றுவதற்கும் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் காசேட்டு மீதி ரூபா 17,932,382 ஆக இருந்த போதிலும் வங்கி மேலதிப் பற்று மீதி ரூபா 614,111,255 ஆக இருந்ததனால் தேறிய காசு மீதி ரூபா 596,178,873 மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது. அத்திகதியில் பெல்வத்த பிரிவின் மற்றும் செவனகல பிரிவின் தேறிய காசு மீதிகள் முறையே ரூபா 555,465,760 மற்றும் ரூபா 17,768,995 ஆக மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தமை அதற்கு காரணமாக இருந்தது. மீளாய்வாண்டிற்கான வங்கி மேலதிகப் பற்றுவட்டி ரூபா 75,470,783 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் நிலைமையும் இந்த வகையிலேயே இருந்தது. மேலும் வங்கி கடன் மற்றும் வங்கி மேலதிகப்பற்று வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பெல்வத்த அலகின் ரூபா 829,068,708 தொகையான | நிறுவனத்தை அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின்னர் 2013 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளைத் தவிர்த்து ஏனைய அனைத்து ஆண்டுகளிலும் நட்டம் அடைந்துள்ளதனால் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிலையான வைப்புக்களை பிணையாக வைத்து வங்கி கடன்களும் மேலதிகப் பற்று வசததிகளும் பெற்றுக்கொள்ளல் இடம்பெற்றிருந்தது. | செலவுகளை முகாமைத்துவம் செய்து நிதி நிலைமையை நல்லதாக்கி நிறுவனத்தை இலாபம் உழைக்கும் நிலைமைக்கு மாற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அனைத்து நிலையான வைப்புக்களும் செவனகல பிரிவின் ரூபா 285,000,000 தொகையான 07 நிலையான வைப்புக்களும் பிணை வைக்கப்பட்டுள்ளன. | | |
| (உ) | செவனகல பிரிவின் 2017 நவம்பர் 01 ஆந் திகதியிலிருந்து 2019 யூன் 30 ஆந் திகதிவரையான காலத்திற்காக ரூபா 4,698,431 தொகையும் பெல்வத்த பிரிவின் 2019 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மார்ச் 31 ஆந் திகதிவரையான காலத்திற்காக ரூபா 175,642 தொகையுமாக மொலேசஸ் உற்பத்தியின் அடிப்படையில் செலுத்த வேண்டிய வரிப்பணத்தை தாமதித்ததன் காரணமாக மதுவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட மொத்தமாக ரூபா 5,874,073 தாமதக் கட்டணமானது முகாமைத்துவத்தின் செயற்திறனின்மையின் அடிப்படையில் கம்பனிக்கு ஏற்பட்ட ஒரு நட்டம் என அவதானிக்கப்பட்டது. | மதுவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய வரியினை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திறனின்மைக்கு பெறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து தாமதக் கட்டணத்தை அறவீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | பெல்வத்த பிரிவினால் முகாமைத்துவ தீர்மானத்தின் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டிலிருந்து விவசாயக் கடனுக்காக அறவிடப்படுகின்ற 12 சதவீத வட்டி வருமானத்தில் 3 சதவீதமானது விவசாயிகளின் நலன்புரிக்காகவும் 1 சதவீதமானது நிறுவனத்தின் நலன்புரி நடவடிக்கைகளுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் விவசாயிகளின் நலன்புரிக் கணக்கு ரூபா 91,061,803 தொகையும் நிறுவனத்தின் நலன்புரி கணக்க ரூபா 30,419,099 தொகையாகவும் இருந்தது. எவ்வாறாயினும் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டுவரை அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்திலிருந்து எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளடக்கபடவில்லை. | 2020 தீசெம்பர் 31 ஆந் திகதி வரை விவசாய கடனுக்காக அறவிடப்பட்ட 12 சதவீதத்திலிருந்து 3 சதவீதமானது இவ்வாறு நலன்புரிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டும் 2021 ஆம் ஆண்டிலிருந்து அந்த வட்டி வீதம் 8 சதவீதம் வரை குறைக்கப்பட்டதுடன் அந்த ஒதுக்கீடும் நிறுத்தப்படும். | பணத்தை மீண்டும் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை பெல்வத்தை பிரிவின் நிதிக்கூற்றுக்களில் இருப்பு மீதிகளில் காலாவதியான இருப்பு மீதியாக ரூபா 9,251,437 கழிக்கப்பட்டிருந்தும் அந்த | நிறுவனத்தை அரசாங்கத்திற்கு ஒப்படைக்கும் போது நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுக் காணப்பட்ட வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் உதிரிப் பாகங்களின் காலாவதியான | பொருள் மெய்மையாய்வில் காலாவதியான இருப்பினை உறுதியாக இனங்காணல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருப்பினை இனங்காண முடியாதிருந்தது. | இருப்பிற்காக இந்த ஒதுக்கீட்டிற்குரிய பொருள் பட்டியல் இல்லாதிருந்ததுடன் எதிர்கால பொருள் மெய்மையாய்வுகளின் போது இந்த மீதிகளை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஏ) | செவனகல பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டடிருந்த 10 வகையான 300 வீடுகளின் வாடகையானது நிகழ்காலத்திற்குப் பொருந்தும் வகையில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் ஆரம்பத்திலிருந்து அறவிடப்பட்ட ரூபா 20 இற்கும் ரூபா 85 இற்கும் இடைப்பட்ட மாதாந்த வாடகை அறவிடப்பட்டிருந்தது. | அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் எந்த வீட்டு வாடகையினையும் செலுத்தாது உத்தியோகபூர்வ வீடுகளில் குடியிருப்பதுடன் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 30 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழைய உத்தியோகபூர்வ இல்லங்களில் பலவற்றின் குறைபாடுகளை பூரணப்படுத்த வேண்டியுள்ளது. மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் வீடுகளை மதிப்பீடு செய்து மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிகழ்காலத்திற்கு பொருந்தும் வகையில் வீட்டு வாடகையை திருத்தம் செய்தல் வேண்டும். |
| (ஐ) | அரசாங்கத்தின் வாடகை வீடுகளுக்கான நீர், மின்சாரம், மற்றும் கேஸ் என்பவற்றிற்காக உத்தியோகத்தர்களினால் கொடுப்பனவு செய்யப்படவேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது செவனகல பிரிவினால் வாடகை மற்றும் நீருக்காக முறையே ரூபா 712,671 மற்றும் ரூபா 97,240 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன. | காணப்படுகின்ற சட்டரீதியான சிக்கல் முடிவடைந்ததன் பின்னர் வீட்டு வாடகை, நீர்ப்பட்டியல், மின்சாரப் பட்டியல் என்பவற்றிற்காக அரசாங்கத்தில் காணப்பட்ட நிகழ்கால விலைகளின் கீழ் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் இயலுமை உள்ளது. | மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்கள் உத்தியோகத்தர்களால் செலுத்தப்படுதல் வேண்டும். கம்பனியால் செலுத்தப்பட்ட கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | ஒரு உத்தியோகத்தர் ஓய்வுபெறும் போது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறவேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதி வரை செவனகல பிரிவில் ஓய்வுபெற்ற 38 ஊழியர்கள் அந்த ஊத்தியோகபூர்வ இல்லங்களிலேயே குடியிருக்கின்றமை அவதானிக்கப்பட்டது. | அனுமதியற்ற குடியிருப்பாளர்களை வெளியேற்றுவதற்காக தற்பொழுது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஊழியர்கள் ஓய்வுபெற்றுச் செல்லும் போது ஊத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து வெளியேறும் நடைமுறை தயாரிக்கப்படுவதற்கும் தற்பொழுது இருக்கின்ற ஓய்வூதியக்காரர்களை அப்புறப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | கம்பனியின் நிதிக்கட்டுப்பாடு சம்பந்தமான செயற்பாடுகளுக்காக பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அதிகாரம் வழங்கப்படாது கொடுப்பனவுகளுக்கான அதிகாரம் வழங்குதல், அங்கீகரித்தல், சான்றுபடுத்துதல் செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிதிக்கட்டுப்பாட்டு அதிகாரத்தினை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனியின் நிதிக்கட்டுப்பாடு சம்பந்தமான செயற்பாடுகளுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அதிகாரத்தினை வழங்குதல் வேண்டும். |

**3.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பெல்வத்த பிரிவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வழிச் சரக்கிருப்பில் 05 ஆண்டுகளிலிருந்து 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் ரூபா 4,904,160 தொகையான இருப்புக்கள் அடங்கியிருந்தமை சச்சரவுத்தன்மையான விடயமாக அவதானிக்கப்பட்டது. | 2014 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து காணப்பட்டு வரும் இந்த மீதியானது பொருட்களின் கிரயம் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டதனால் ஏற்பட்ட கணக்கீட்டு தவறானதுடன் இது தொடர்பாக இன்னும் ஆராய்ந்து பார்த்து எதிர்காலத்தில் கணக்குகளை செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இப்பொருட்கள் கிடைத்துள்ளனவா என்பது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பெல்வத்த பிரிவின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வது தொடர்பாக 1379 கடன் கொடுத்தோர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 188,485,761 தொகை 01 ஆண்டிலிருந்து 10 ஆண்டுகள் வரையான காலம் தீர்த்துவைக்கப்படாது காணப்பட்டமை சச்சரவுத் தன்மையான விடயமாக அவதானிக்கப்பட்டது. | இந்த செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் மீதிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இக்கடன் கொடுத்தோர் உள்ளபடியாக காணப்படுகின்றார்களா என்பதனைத் தேடிப்பார்த்து பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2012 ஆம் ஆண்டின் போது ''செவனகல சுகர் இன்டஸ்ரீஸ்'' நிறுவனம் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அந்த நிறுவனத்தின் பொறுப்புக்களை தீர்த்துவைக்கும் கடப்பாடு இல்லாதிருந்தும் அந்த நிறுவனத்தின் மின்சாரம், நீர், | செவனகல சுகர் இன்டஸ்ரீஸ் எனும் பெயருள்ள நிறுவனம் தற்பொழுது இல்லாததனால் பெறவேண்டிய பணமாக கணக்கீடு செய்வது நடைமுறை சாத்தியமற்றதாகும். | தீர்த்துவைக்கும் பொறுப்பு இல்லாத போதிலும் இடம்பெற்றுள்ள இக்கொடுப்பனவு தொடர்பாக மீண்டும் புலனாய்வு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கரும்புகளைப் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்க நிறுவனங்களுக்கும் விவசாயிகளுக்கும் செலுத்த வேண்டியிருந்த ரூபா 38,096,521 தொகை மற்றும் விலகிய ஊழியர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்களின் வைப்புக்களை மீளச்செலுத்துவதற்கான ரூபா 383,833 தொகையுமாக மொத்தமாக ரூபா 38,480,354 தொகை 2012 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கம்பனியால் உரிய தரப்பினர்களுக்குச் செலுத்தி தீர்த்துவைக்கப்பட்டமையானது சச்சரவுத்தன்மையான விடயமாகும். | | |
| (ஈ) | ஒரு அலுவலகத்தை செயற்படுத்துவதற்காக ஒரு அரசியல்வாதிக்கு வழங்கப்பட்டுள்ள செவனகல பிரிவின் உத்தியோகபூர்வ இல்லத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2020 ஆம் ஆண்டிலிருந்து 2030 ஆம் ஆண்டு வரையான காலத்திற்காக ஒரு மாதத்திற்கு ரூபா 1,000 வீதம் ரூபா 132,000 வீட்டு வாடகையினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தமை சச்சரவுத்தன்மையான விடயமாகும். மேலும் ஒரு மாதத்திற்கு ரூபா 2,000 வீதம் அரசாங்க வாடகைக்கு வழங்கி 2016 ஏப்ரல் மாதத்தின் போது உடன்படிக்கை காலம் முடிவடைந்திருந்த ஒரு வீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வீடு சம்பந்தமாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அந்த வழக்கு நடவடிக்கையானது முடிவடைந்ததன் பின்னர் அதன் கட்டளையை அமுல்ப்படுத்தி மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டள்ளது. | உத்தியோகபூர்வ இல்லத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் 2008 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து சீனி மற்றும் சீனி சார்ந்த உற்பத்திப் பொருட்களின் அடிப்படையிலான பெறுமதி சேர் வரி அறவீட்டிலிருந்து கம்பனி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செவனகல பிரிவினால் தொடர்ச்சியாக அந்த உற்பத்திப் பொருட்களுக்காக பெறுமதி சேர் வரி அறவிடப்பட்டிருந்தமை சச்சரவுத் தன்மையான ஒரு விடயமாவதுடன் மீளாய்வாண்டில் அந்த அறவீடு ரூபா 5,133,694 ஆகும். | சீனி மற்றும் சீனி சார்ந்த உற்பத்திப் பொருட்கள் மீதான பெறுமதி சேர் வரி அறவீட்டிலிருந்து கம்பனி விடுவிக்கப்பட்டிருந்தமை சம்பந்தமாக கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | வரியினை அறவிடும் போது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | செவனகல பிரிவினால் காபன்டயொக்சயிட் வாயுவினை உற்பத்தி செய்து 01 கிலோ கிறாம் ரூபா 25 இற்கு விற்பனை செய்வதற்கு 20 ஆண்டுகள் காலப்பகுதிக்கு 2014 ஆம் ஆண்டின் போது ‘‘இன்டஸ்ரியல் கேஸ் தனியார் கம்பனி’’ உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருந்த போதிலும் ‘‘லங்கா காபோனிக் இன்டஸ்ரீஸ்’’ என்ற பெயருள்ள மற்றுமொரு கம்பனிக்கு கேஸ் விற்பனை செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே கேஸ் விற்பனைக்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் கிடைக்க வேண்டிய ரூபா 7,473,696 இனை உள்ளடக்கி 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 17,770,596 தொகையை அறவீடு செய்வதற்கும் 05 ஆண்டுகள் காலமாக விற்பனை விலையைத் திருத்தம் செய்வதற்கும் உற்பத்தி செய்யப்பட்ட காபன்டயொக்சயிட்டின் அளவினை அளவீடு செய்வதற்காக ஒரு மீட்டரினைப் பொருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்காமையினால் காபன்டயொக்சயிட் விற்பனை | காபன்டயொக்சயிட் விற்பனை விலை 2021 திசெம்பர் 31 ஆந் திகதியிலிருந்து திருத்தப்பட்டுள்ளது. ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிறையை அளவீடு செய்யும் பலகையினைப் பயன்படுத்தி நிறையை அளவீடு செய்தல் இடம்பெற்று டிக்கட்டின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்டு இன்வொயிஸ் வழங்கப்பட்டுள்ளது.<br><br>உடன்படிக்கை செய்த கம்பனிக்கு காபன்டயொக்சயிட் வாயுவினை விற்பனை செய்யாது மற்றுமொரு கம்பனிக்கு விற்பனை செய்தல் மற்றும் பெறவேண்டிய பணத்தை அறவீடு செய்யாமை சம்பந்தமாக பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | விலையை திருத்தம் செய்வதற்கும் உற்பத்தி செய்த காபன்டயொக்சயிட்டின் அளவினை அளவீடு செய்யும் வகையில் ஒரு மீற்றரினைப் பொருத்துவதற்கும் அறவிட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கும் உடன்படிக்கை செய்த வகையில் நடவடிக்கை எடுப்பதற்கும் முயற்சி எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | யிலிருந்து முறையான வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதில் திருப்தி கொள்ள முடியாதிருந்தது. | | |
| (ஆ) | கம்பனியின் தொழிற்சாலைகளின் உச்ச அளவான இயலளவு 897,500 மெட்ரிக்தொன் கரும்புகளாக இருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டில் கரும்பு வழங்கல்கள் 571,370 மெட்ரிக்தொன்களாக இருந்ததனால் மீளாய்வாண்டில் தொழிற்சாலைகளின் இயலளவில் 63 சதவீதமே பயன்படுத்தப்பட்டிருந்தது. கரும்பு வழங்கல் குறைவடைதல் கம்பனியின் தொழிற்சாலைகளை உச்ச இயளலவு மட்டத்தினை அடைந்து கொள்வதற்கு முடியாமைக்கு காரணமாக இருந்தது. | மழை வீழ்ச்சி குறைவடைதல், பசளைகள் மற்றும் விவசாய இரசாயனப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக விளைச்சல் குறைவடைந்து கரும்புகளை அரைக்கும் அளவும் குறைவடைந்தது. கல் அணை செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துதல், சிறிய குளங்களை அபிவிருத்தி செய்தல், சிறிய மழைநீர் குளங்களை நிர்மாணித்தல், விசாயக் கிணறுகளை நிர்மாணித்தலுக்காக விவசாயிகளுக்கு உதவி வழங்குதல், நீர் பம்பிகள் மற்றும் நீர்க்குழாய்களை வழங்குதல், பசளைகள் மற்றும் கிருமி நாசினிகளை வழங்குதல், வெளியக விவசாயக காணிகளின் அளவை விஸ்தரித்தல், கரும்புகளுக்காக உயர்ந்த விலையினைச் செலுத்துதல் ஆகிய முறைமைகளின் மூலம் வழங்கலினை அதிகரிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. | தொழிற்சாலைகளின் உச்ச அளவு இயலளவிற்கு நிகரான வகையில் கரும்பினை வழங்குவதற்கான திட்டங்களை அமுல்ப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டில் 9,787,259 லீற்றர் அளவான கம்பனியின் எதனோல் உற்பத்தியானது வேண்டுதல் குறைவடைந்ததன் காரணமாக 2019 ஆம் ஆண்டில் 5,212,560 லீற்றர் வரை 47 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. | எதனோல் இறக்குமதி செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டதன் அடிப்படையில் ரூபா 290 விலையின் கீழ் விற்பனை மட்டுப்படுத்தப்பட்டு 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டின் போது உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. எனினும் 2020 ஆம் ஆண்டின் போது எதனோல் இறக்குமதியை நிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து ஒரு லீற்றருக்கு ரூபா 500 நிரந்தர விலையினை நிர்ணயித்ததன் காரணமாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் உற்பத்தியும் விற்பனை வருமானமும் அதிகரித்துள்ளது. | உற்பத்தி இயலளவினை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பெல்வத்த சீனி தொழிற்சாலையின் வருடாந்த சீனி உற்பத்தி 2018 ஆம் ஆண்டில் 28,061 மெட்ரிக்தொன்களாக இருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் 25,162 மெட்ரிக் தொன்களாக 10 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. கரும்பு வழங்கலும் அவற்றின் சீனி சதவீதமும் குறைவடைதல் இதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்த போதிலும் அவற்றினை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டில் கரும்பு வழங்கல் 371,694 மெட்ரிக்தொன்கள் மற்றும் சீனியை உருவாக்கும் இயலுமை 7.55 சதவீதமாக இருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டின் போது கரும்பு வழங்கல் 330,824 மெட்ரிக்தொன்கள் மற்றும் சீனியை உருவாக்கும் இயலுமை 7.61 சதவீதமாகும். பசளை தட்டுப்பாடு இதற்கு தாக்கமளித்திருந்தது. | கரும்பு வழங்கலினையும் சீனி பிழிந்தெடுக்கும் சதவீதத்தினையும் அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | செவனகல பிரிவின் கரும்பு பயிர் செய்யக்கூடிய மொத்த காணிகளின் அளவு 4,215 ஹெக்டயர்களாக இருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் பயிரிடப்பட்டிருந்த மொத்த காணிகளின் அளவு 3,240 ஹெக்டயர்களாகும். இதற்கிணங்க தொழிற்சாலையின் செயற்பாடுகளை உச்ச இயலளவில் பேணுவதற்கு போதியளவான கரும்பு வழங்கலினை வழங்கக்கூடியதான காணிகள் செவனகல பிரிவிடம் காணப்பட்டிருந்தும் அக்காணிகளில் கரும்புகளை பயிர்ச்செய்கை செய்து தொழிற்சாலையின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளப் பயிர்ச் செய்கை செய்வதற்காக காணிகளை தயார்படுத்துதல், பயிர்களை மாற்றுதல், விதைக் கரும்புகளை பிடுங்குதல், வறட்சி போன்ற காரணங்களின் அடிப்படையில் பயிர்ச்செய்கை காணி முழுவதும் போதியதாக இல்லாதிருந்தும் தொடர்ச்சியாக கரும்பு பயிர்ச்செய்கை செய்யும்காணியின் அளவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முழுக் காணி அளவினையும் பயிர்ச்செய்கை மேற்கொள்வது தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | செவனகல பிரிவிற்காக பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்யும் போது கட்டளையுடன் அக்கட்டளை தொடர்பான முழுப்பணமும் முற்பணமாக வழங்கப்பட்டிருந்ததுடன் 01 ஆண்டிலிருந்து 07 ஆண்டுகள் வரையான காலத்தில் 21 உள்நாட்டு வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 12,965,197 முற்பணம் மற்றும் 35 வெளிநாட்டு வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 6,524,060 முற்பணம் 2021 யூலை 31 கணக்காய்வுத் திகதி வரையும் தீர்த்து வைக்கப்படவில்லை. அவ்வாறே இப்பொருட்களை பொருள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கி பொருள் பெறுவனவு பத்திரமும் வழங்குதல் இடம்பெற்றிருக்கவில்லை. | கொள்வனவு முற்பணங்களை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தீர்த்துவைக்கப்படாத முற்பணங்கள் தொடர்பாக துரிதமாக ஆராய்ந்து பார்ப்பதற்கும் கொள்வனவு செய்தல் சம்பந்தமாக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| செவனகல பிரிவினால் ரூபா 27,067,812 தொகையான இயந்திரங்களை கொள்வனவு செய்து 2013 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 2014 ஆம் ஆண்டின் போது நிறுத்தப்பட்டிருந்த கழிவு நீரை சுத்திகரிக்கும் செயற்திட்டம் மற்றும் ரூபா 2,864,444 செலவு செய்து 2014 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத குழாய்க் கிணறு செயற்திட்டம் தோல்வியடைந்திருந்ததுடன் செலவு செய்யப்பட்ட பணம் பல ஆண்டுகளாக நடைமுறை வேலைக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக கம்பனிக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கும் முடியாதிருந்தது. | கழிவு நீரை சுத்திகரிக்கும் செயற்திட்டம் முடிவடைந்திருக்கவில்லை. ஆராய்ச்சி நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்ட குமாய்க் கிணறுகளை நிர்மாணித்தல் சம்பந்தமாக புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | இச்செயற்திட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்து அதனை செயற்படச் செய்வதற்கு அல்லது எவரினதும் கவனயீனமாக இருந்தால் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பெல்வத்த பிரிவு 2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் ரூபா 37,982,159 செலவு செய்து ஆரம்பித்த 02 செயற்திட்டங்களும் 2011- 2015 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் ரூபா 55,915,893 செலவு செய்து ஆரம்பித்த 17 செயற்திட்டங்களும் வேலைகள் முடிவுறுத்தப்படாது கைவிடப்பட்டிருந்தன. இந்த செலவுகள் சச்சரவுத் தன்மையானவை மற்றும் விளைவற்றவை எனவும் செலவுகள் சம்பந்தமாக எதுவித பரீட்சிப்புக்களும் மேற்கொள்ளடப்படவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. | முடிவுறுத்தல் சம்பந்தமாக எதுவித அறிக்கையும் இல்லாமை, செயற்திட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்படாமை, செயற்திட்டங்கள் இடைநடுவில் கைவிடப்பட்டமை, கரும்பு தண்டுகளை உட்புகுத்தும் கிரேன்கள் செயற்திட்டத்தை ஒப்படைப்பதற்கு முன்னர் பழுதடைந்தமை, 02 செயற்திட்டங்கள் நிறுவனத்தை அரசாங்கத்திடம் ஒப்படைக்கும் போது கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட செலவாக இருந்தமை என்பன காரணமாக இருந்தன. | சச்சரவுத் தன்மையான மற்றும் விளைவற்ற இச்செலவுகள் சம்பந்தமாக விசாரணைகளை நடாத்தி பொறுப்புக் கூறக்கூடியவர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பெல்வத்த பிரிவில் கோல்ப் விளையாட்டரங்கினை பேணுதல் மற்றும் அதனை பராமரிப்பதற்காக சம்பளம் செலுத்துதல் என்பவற்றிற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 6,232,595 மற்றும் ரூபா 6,618,123 தொகைகள் செலவு | அரசாங்கத்திற்கு ஒப்படைத்ததன் பின்னர் கோல்ப் விளையாட்டரங்கு பயன்படுத்தப்படாதிருந்தும் அவற்றினை பராமரிக்க வேண்டியிருந்ததனால் அதற்காக ஊழியர் சம்பளம் செலுத்தப்பட்டது. | இந்த விளையாட்டரங்கினை பயன்படுத்தும் வகையில் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த போதிலும் விளையாட்டு மைதானத்தினை கோல்ப் விளையாட்டிற்காக ஈடுபடுத்தாமையின் காரணமாக செலவு செய்த பணம் விளைவற்றதாக மாறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | விளையாட்டரங்கினை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்காக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | |
| (இ) | பெல்வத்த பிரிவு 2013 ஆம் ஆண்டின் போது குத்தகை வசதிகளின் கீழ் ரூபா 128,910,000 பெறுமதியான கிரேன் இயந்திரத்தினை கொள்வனவு செய்து அதற்காக ரூபா 120,750,000 பணம் செலுத்தி அதற்குத் தேவையான மின்சாரத்தினை வழங்குவதற்கு ரூபா 2,254,850 செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வழங்குனரினால் இணங்கிக் கொள்ளப்பட்டவாறு அந்த இயந்திரத்தினை தொழிற்சாலையில் ஸ்தாபிக்காமையின் காரணமாக கொள்வனவு செய்த திகதியிலிருந்து எந்த பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ளாது காணப்பட்டதனால் செலவு செய்த ரூபா 123,004,850 பணம் விளைவற்ற செலவாக மாறியிருந்தது. | தொழிற்சாலைக்கு கரும்புத் தண்டுகளை உட்புகுத்துவதற்காக கொள்வனவு செய்து 03 மாதங்களாகிய குறுகிய காலத்தில் பழுதடைந்த இந்த கிரேன் இயந்திரத்தினை திருத்தம் செய்த போதிலும் அது வெற்றியளிக்கவில்லை ல. இயந்திரத்தின் ஒரு பகுதிக்குரிய கிரயமாகிய ரூபா 11,812,500 பணத்திற்காக குத்தகைப் பெறுமதியை செலுத்துதல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இச்செயற்திட்டம் சம்பந்தமாக நிதி குற்றப்பலனாய்வுப் பிரிவு புலனாய்வுகளை மேற்கொண்டிருந்தும் இறுதித் தீர்மானம் வழங்கப்படவில்லை. | உள்ளக புலனாய்வின் மூலம் பொறுப்புக்கூறக்கூடியவர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கும் நிதிகுற்றப் புலனாய்வுப் பிரிவின் புலனாய்வு நடவடிக்கைகளின் செயல் முன்னேற்றத்தினை ஆராய்ந்து பார்த்து அதனை மீள அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 1988 இல் இலிகிதர் பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தரின் வேண்டுதல் மற்றும் சேவை அனுபவத்தை மாத்திரம் கவனத்தில் கொண்டு முகாமையாளர் (நிதி) பதவி வரை பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்ததுடன் தகுதிவாய்ந்த நியமன அதிகாரியான தலைவரினால் முறைப்படியாக நியமனம் வழங்கப்படாது அந்த உத்தியோகத்தர் பிரதி பொது முகாமையாளர் (நிதி) பதவியின் பதில் கடமைக்காக ரூபா 15,000 தொகையான பதில் கடமை படி, ரூபா 15,000 தொகையான எரிபொருள் படி, ரூபா 50,000 தொகையான வாகனப்படி என்பன 2018 மே மாதத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை மாதாந்தம் வழங்கப்பட்டிருந்தது. | இது சம்பந்தமாக மேலும் பரீட்சிப்புக்கள் செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. | கம்பனிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டியதுடன் அனைத்து ஆட்சேர்ப்புக்களும் அதற்கு இணங்க மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 4. கணக்குகளில் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைபு ஆண்டறிக்கையுடன் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும் கம்பனியால் நிதிக்கூற்றுக்கள் 18 மாதங்கள் தாமதித்து 2021 ஆகஸ்ட் 16 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் வரைபு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | வரைபு ஆண்டறிக்கையுடன் நிதிக்கூற்றுக்கள் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் வரைபு ஆண்டறிக்கையுடன் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |